[29th October 1962

திரு. கோ. சி. மணி : கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மூப்பனாராலும், சுதந்திராக் கட்சித் தலைவர் குறிப்பிட்ட வலையாராலும் இன்றைக்கு அந்தப் பிற்பட்ட சமூகத்தினர் பெருவாரியாக எந்தத் தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

கனம் திரு. பூ. கக்கன் : உழவுத் தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள்.

பள்ளியிறுதித் தேர்வு சர்டிபிகேட்

* 831 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) சர்டிபிகேட் புத்தகத்தில் ஒவ்வொரு பாடத்திற்குமான மாநிலச் சராசரி மார்க்கு குறிக்கப்படும் வழக்கம் இவ்வாண்டு மட்டும் கைவிடப்பட்டிருப்பது என் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Board of Secondary Education decided that the entry of the State Average in the Secondary School-Leaving Certificate was not essential as it did not serve any purpose and even created some confusion. Accordingly, no provision was made for the entry of the State Average in the Secondary School-Leaving Certificates issued under the Reorganised Scheme of Secondary Education.

புலவர் கா. கோவிந்தன் : மாகாண சராசரி மார்க் போடுவதால் பயன் இல்லையென்று கனம் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மாணவன் பெற்ற மார்க், பள்ளியின் சராசரி மார்க், மாகாணத்தின் சராசரி மார்க் போடுவது நிலைமையைச் சரியாகக் காட்டுவதாக இருக்கும். அது எப்படி பயன் அற்றதாக இருக்கும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி எல்லாம் முடிவு செய்வது போர்ட் ஆப் செகண்டரி எஜுகேஷன். அவர்கள் தான் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து ஸ்டேட் ஆவரேஜ் போட வேண்டாமென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

செஞ்சியில் விடுதி கட்டுதல்

Srimathi T. N. ANANDANAYAKI : Question No. 830 has not been taken up.

Mr. SPEAKER : It will be taken up now.

* 830 கேள்வி.—திரு. கு. கோபாலகவுண்டர் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சிக்கோட்டையை பார்க்க வரும் யாத்ரிகர்களுக்காக செஞ்சியில் ஒரு டூரிஸ்ட் ஹோம் கட்ட உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால் எப்போது கட்டப்படும் ?

The Hon. Sri G. BHUVARAHAN : (a) No, Sir.

(b) Does not arise.